**பருத்தித்துறை நகரசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 16 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 27 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பருத்தித்துறை நகரசபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

குத்தகை ரூபா 24,000 நானாவித வைப்பில் இருந்து திரண்டநிதிக்கு மாற்றப்படாமையினால் திரண்டநிதி கணக்குகளில் குறைவாக கணக்கிடப்பட்டுள்ளது.

#### 1.3.2 செலுத்தவேண்டியவை

(அ) சுற்றாடல் பாதுகாப்பு கட்டணம் ரூபா 465,533 நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கொடுக்கப்படாமல் வைப்புக் கணக்கில் உள்ளது.

(ஆ) ரூபா 220,458 பிடிபணங்கள் உரிய ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படாது 2013 ஆம் ஆண்டிலிருந்து வைப்புக் கணக்கில் உள்ளது.

#### 1.3.3 ஆவணச் சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள் இல்லாமையின் காரணமாக ரூபா 77,968 பெறுமதியான 02 கொடுக்கல் வாங்கலைக் கணக்காய்வின்போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

#### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்யுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நகரசபை ஒழுங்கு விதி | |
| (i) அத்தியாயம் III விதி 54(1) | வீதவரி அட்டவணை நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன் செயலாளரிடம் கையளிக்கப்பட்டு டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன் கொடுப்பனவுகள் செய்யப்பட்டு பூரணப்படுத்தப்பட வேண்டும் என்பதனை நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் VII விதி 171 | காசுப் புத்தகம் ஏனைய பதிவேடுகள் செயலாளரினால் நாளாந்தம் செவ்வை பார்க்கப்படவில்லை. |
| (ஆ) நகரசபைகள் கட்டளைச்சட்டம் பிரிவு 44(2) | சபைகளின் வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் இலக்கம் 571 | இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட ரூபா 597,251 பெறுமதியான வைப்புக்களின் மீது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 31,138,713 விளைந்திருப்பதுடன் ஒப்பிடும்போது இதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 39,604.771 இருந்தமை நிதி விளைவு ரூபா 8,466,058 குறைவடைந்துள்ளமைக்கு செலவின அதிகரிப்பே காரணமாகும்.

### 2.2 தொழிற்படு மூலதனம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 177,637,018 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 161,485,199 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 16,151,819 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 வருமான முகாமைத்துவம்

#### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015<br>மதிப்பிடப்பட்டது | <br>உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| இறைகளும் வரிகளும் | 985 | 1,064 | 3,160 |
| குத்தகை வாடகைகள் | 10,009 | 13,825 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 470 | 524 | |
| மூலதன நன்கொடை | | | 107 |
| ஏனைய வருமானங்கள் | 55,756 | 57,438 | 35,640 |
| **மொத்தம்** | **67,220** | **72,851** | **38,907** |

### 2.3.2 வீதவரிகள்

மீளாய்வாண்டில் வீதவரியாக ரூபா 3,160,437 அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 உத்தரவுப்பத்திரக் கட்டணங்கள்

மீளாய்வாண்டில் அறவிட வேண்டிய வாடகை மற்றும் உத்தரவுப்பத்திரக் கட்டணங்கள் ரூபா 1,093,537 அறவிடப்படடிருக்கவில்லை.

### 2.3.4 முத்திரைக் கட்டணங்கள்

காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 30,776,769 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் மீளாய்வாண்டில் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக்கழிவு முகாமைத்துவம்

சபையின் எல்லைக்குள் திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கபடாமையினால் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 111,211 தொடக்கம் ரூபா 4,409,056 வரையான வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் திருப்திகரமாக மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்**

சபையின் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். எனினும் குறித்த சபையில் மீளாய்வாண்டில் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடைபெற்றிருக்கவில்லை.

**4.4 சொத்து முகாமைத்துவம்**

**பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

(அ) 5 வருடங்களுக்கு மேலாக ஒரு உழவு இயந்திரம் பயன்படுத்தப்படாலுள்ளது.

(ஆ) ரூபா 1,545,182 பெறுமதியான வாகனத் தரிப்பிடம் பயன்படுத்தப்படாதுள்ளது.

**5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) பாதீடு
(ஆ) வருமான அறவீடு
(இ) முற்பணம்
(ஈ) வைப்பு
(உ) வாகன பயன்பாடு
(ஊ) சில்லறைக் கடனாளிகள்